# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-74** **தேதி:- 12.06.2018**

**மாநில நிர்வாகிகள் கூட்டம்- சென்னை-11.06.2018.**

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள மாநில சங்க அலுவலகத்தில் தமிழ் மாநில தலைவரும், அகில இந்திய உதவி பொது செயலாளருமான தோழர் S.செல்லப்பா தலைமையில் 11.06.2018 அன்று நடைபெற்றது.

கோவையில் மிகச்சிறப்பாக நடைபெற்ற மாநில செயற்குழு முடிவுகளின் அமலாக்கம் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் 18 தோழர்களும், TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் அவர்களும், தோழர் C.பழனிச்சாமி AGS BSNL CCWF அவர்களும் இந்த செயற்குழுவில் பங்கு பெற்றனர்.

மாநில உதவி செயலாளர் தோழர் S.சுப்ரமணியன் அஞ்சலி உரை நிகழ்த்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் விவாதத்திற்கு முன் வைத்த குறிப்பினை விளக்கி பேசிய பின்னர் அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா அவர்கள் துவக்க உரையாற்றினார். அவர் தனது துவக்க உரையினில் தெருமுனை பிரச்சார இயக்கத்தினை தமிழ் மாநிலம் 578 இடங்களில் நடத்தியதை பாராட்டியதுடன் 127 மையங்களில் இந்த இயக்கத்தை கோவை மாவட்ட சங்கம் நடத்தியதை குறிப்பிட்டு பாராட்டினார். ஊதிய மாற்றத்தில் இன்றைய நிலை, மத்திய சங்கத்தின் செயல்பாடுகள் உள்ளிட்ட பிரச்சனைகளை விரிவாக எடுத்துரைத்ததுடன், செப்டம்பர் 5 டெல்லி பேரணியில் தமிழகத்தில் இருந்து பெருவாரியான தோழர்கள் பங்கேற்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

BSNL WWCC அகில இந்திய அமைப்பாளர் தோழர் P.இந்திரா அவர்கள் தனது உரையில் BSNL WWCCயின் தமிழ் மாநில மாநாடு பாண்டிச்சேரியில் ஜூலை 15 நடைபெற உள்ளதை விளக்கி பேசியதுடன் தமிழ் மாநிலம் முழுவதும் இருந்து பெருவாரியான பெண் தோழர்களை அந்த மாநாட்டில் பங்கேற்க செய்ய தமிழ் மாநில சங்கம் முன்கையெடுக்க வேண்டும் என்றும், மாவட்ட மாநாடுகள் உடனடியாக நடைபெற மாநில சங்கமும், மாவட்ட சங்கங்களும் உதவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தமிழகத்தில் தெருமுனை பிரச்சார இயக்கத்தில் பெண்களும் பல இடங்களில் சிறப்பாக தங்களின் பங்களிப்பை செலுத்தியுள்ளனர் என்பதையும் பெருமையுடன் சுட்டிக்காட்டினார்.

அதன் பின்னர் நடைபெற்ற விவாதத்தில் அனைத்து மாநில சங்க நிர்வாகிகளும் பங்கேற்றனர். தோழர்கள் கேட்ட பல் வேறு சந்தேகங்களுக்கும் தோழர் S.செல்லப்பா விளக்கம் கொடுத்தார். பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டன.

1. ஊதிய மாற்றம் உள்ளிட்ட பிரச்சனைகளில் அகில இந்திய AUAB எடுத்த நடவடிக்கைகளை இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டியதுடன், இதற்கு ஏதேனும் தடை ஏற்பட்டது என்றால் உடனடியான போராட்டங்களுக்கு ஊழியர்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என கிளை மாவட்ட நிர்வாகிகளை கேட்டுக் கொண்டது.

2. மே 7ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை துணை டவர் நிறுவனம் அமைக்கும் அரசின் கொள்கைகளுக்கு எதிராக மக்கள் மத்தியில் தெருமுனை பிரச்சாரத்தை தமிழகத்தில் நமது தோழர்கள் வெற்றிகரமாக 578 மையங்களில் நடத்தியதையும் அதில் 1,31,000 சுற்றறிக்கைகளை வினியோகித்தத்தையும் பாராட்டிய மாநில நிர்வாகிகள் கூட்டம் குறிப்பாக கோவை மாவட்டத்தில் 127 மையங்களில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றதற்கு கோவை மாவட்ட சங்கத்தையும் AUAB தோழர்களையும் மனதார பாராட்டுகிறது. இந்த தெருமுனை பிரச்சாரங்களில் நமது ஒப்பந்த ஊழியர்களும், ஓய்வூதியர்களும், பெண் தோழர்களும் பெருமளவில் பங்கேற்றதை இந்த மாநில நிர்வாகிகள் கூடம் பெருமையுடன் நினவு கூருகிறது. அதே போல கோவை மாவட்டத்தில் பேச்சாளர்களுக்கு மூன்று பக்க குறிப்பு கொடுத்து அதிக அளவிலான தோழர்களை பிரச்சாரங்களில் பயன்படுத்தியது, உண்டியல் வசூல் செய்தது, விடுப்பு எடுத்து தோழர்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்றது உள்ளிட்ட அனைத்து விஷயங்களையும் தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டியது. அது போன்ற நிகழ்ச்சிகள் இதர மாவட்டங்களிலும் நடந்திருக்கக் கூடும். அதனை தமிழ் மாநில சங்கத்திற்கு ஒரு குறிப்பாக மாவட்ட சங்கங்கள் எழுத்து பூர்வமாக அனுப்பி வைக்க வேண்டுமென தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

3. மத்திய அரசின் நவீன தாராளமயக் கொள்கைகள் நாட்டில் உள்ள விவசாயிகள், உழைப்பாளிகள், பொதுத்துறை ஊழியர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்து பகுதி தொழிலாளர்களுக்கும் கடுமையான பாதிப்பை உருவாக்கி வருவதைக் கண்டித்தும் அந்த கொள்கையின் அமலாக்கத்தை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி புது டெல்லியில் “தொழிலாளர்-விவசாயி பாதுகாப்பு பேரணி” நடைபெற உள்ளது. அதில் நமது தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக 250 தோழர்களை பங்கேற்க செய்வது என தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான கோட்டா இத்துடன் அனுப்பபடும் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது. இந்த தோழர்களுக்கான பயணச் சீட்டு முன்பதிவு உள்ளிட்ட பணிகளை உடனடியாக மாவட்ட சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. மே மாதம் 3ஆம் தேதி, BSNL பணிகளை அசுர வேகத்தில் வெளியாருக்குக் கொடுப்பதை நிறுத்திடு, BSNL நிறுவனத்தின் வீண் செலவுகளை குறைத்திடு, பணியில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் மருத்துவ வசதிகளைக் குறைக்காதே, ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்யாதே, SR. TOA கேடரில் புதிய நியமனங்கள் செய்திடு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கறுப்பு அட்டை அணிந்து ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிய அனைத்து தோழர்களுக்கும் தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டது.

5. மே மாதம் 22ஆம் தேதி கும்பகோணத்தில் நடைபெற்ற தோழர் மோனி போஸ் நினைவு கருத்தரங்கத்தில் பங்கேற்ற தோழர்களை பாராட்டுவதுடன் ஓரிரு மாவட்டங்களில் இருந்து தோழர்களும் ஒரு சில மாநில சங்க நிர்வாகிகளும் பங்கேற்காததை சரியல்ல என சுட்டிக்காட்டியது. அந்த கருத்தரங்கத்தில் சிறப்புரையாற்றிய தோழர்கள் வெங்கடேஷ் ஆத்ரேயா மற்றும் தோழர் R.பத்ரி ஆகியோருக்கு இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் நன்றியுடன் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறது.

6. BSNL WWCCயின் மாவட்ட மாநாடுகள் பாண்டிச்சேரி மற்றும் கடலூரில் நடைபெற்றுள்ளது. அதில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு மாநில நிர்வாகிகள் கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. கோவை மாவட்டத்தில் ஜூலை 7ஆம் தேதியும், ஈரோடு மாவட்டத்தில் ஜூலை 8ஆம் தேதியும் மாவட்ட மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களிலும் உடனடியாக மாவட்ட மாநாடுகளை நடத்திட திட்டமிட வேண்டும்.

   ஜூலை 15அன்று நடைபெற உள்ள BSNL WWCCயின் தமிழ் மாநில மாநாட்டிற்கு மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இணைப்பில் உள்ள அளவிற்கு குறையாமல் பெண் தோழர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அந்த மாநாட்டில் அதில் தமிழ் மாநில செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும், அந்த மாநாட்டிற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதியினை அனைத்து மாவட்ட சங்கங்களும் உடனடியாக தமிழ் மாநில சங்கத்திற்கு அனுப்பிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

   அகில இந்திய BSNL WWCC சார்பாக ஜூன் 30ஆம் தேதியன்று பெங்களூருவில் ஒரு கருத்தரங்கம் நடைபெற உள்ளது. அதில் பங்கேற்பதற்காக மாவட்ட வாரியான பெண் தோழர்களின் எண்ணிக்கையை BSNL WWCC முடிவெடுத்துள்ளது. அதில் பங்கேற்பதற்கான பெண் தோழர்களை நமது மாவட்ட சங்கங்கள் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

7. ஒப்பந்த ஊழியர்களின் பில்கள் மாவட்டங்களில் இருந்து மாநில நிர்வாகத்திற்கு அனுப்புவதை நமது மாவட்ட சங்கங்கள் கண்காணிக்க வேண்டும். கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையில் கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து ஏப்ரல் மாதம் வந்த 3 கோடி ரூபாய் நிதியினை மாவட்டங்களில் இருந்து பில்கள் வராத காரணத்தால் மாநில நிர்வாகம் திருப்பி அனுப்பியுள்ளதை சுட்டிக்காட்டி இதில் நமதுமாவட்ட சங்கங்கள் கூடுதல் கவனம் எடுக்க இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. அதே போல பில்களை உரிய நேரத்தில் நிர்வாகத்திடக் தராமல் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்காமல் இருக்கும் ஒப்பந்ததாரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் நிர்வாகத்தை கேட்டுக் கொள்கிறது.

8. இளம் தோழர்களுக்கான பயிற்சி முகார் ஜூன் மாதத்தில் விருதுநகர் மாவட்டத்தில் நடத்துவது என தமிழ் மாநில செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அகில இந்திய அளவிலான ஒரு கூட்டம் நடைபெற உள்ளதால் அந்தக் கூட்டம் முடிந்தவுடன் நமது மாநிலத்தில் அந்தக் கூட்டம் நடத்தலாம் என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

9. நSSM அகில இந்திய மாநாட்டு நிதி, ஒக்கி புயல் நிவாரண நிதி, தோழர் மோனி போஸ் நினைவு கருத்தரங்க நிதி உள்ளிட்ட நிதிகளை ஜூன் 30க்குள் வழங்காத அனைத்து மாவட்ட சங்கங்களும் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும் இந்த மாநில

நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. மேலும் தீண்டாமை கொடுமைகள் நடைபெறக் கூடிய பகுதிகளுக்கும் இயற்கை பேரிடர் நடைபெறும் போதும் நமது மாவட்ட சங்கங்கள் மாநில மையத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாக அங்கு நேரில் சென்று உதவிட வேண்டும் என்றும் இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வன்கொடுமை தடுப்பு சட்டத்தை நீர்த்து போகச் செய்யும் முயற்சியினை கண்டித்து தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஜூலை 2ஆம் தேதி ரயில் மறியல் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்துள்ளது. அந்த ஜூலை 2ஆம் தேதியன்று நமது அனைத்து கிளைகளிலும் அதே கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டும் என இந்த தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

10. BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு மைசூரில் ஜனவரி மாத துவக்கத்தில் நடைபெற உள்ளதால், மாநாட்டுக் காலம் நிறைவடைகின்ற கிளை மற்றும் மாவட்ட மாநாடுகளை உடனடியாக நடத்த திட்டமிட வேண்டும். கடந்த மாநில செயற்குழுவிற்கு பின் விருதுநகர் மாவட்ட மாநாடு மே மாதம் 29மற்றும் 30ஆம் தேதிகளில் எழுச்சியுடன் நடைபெற்றது. அதில மாவட்ட செயலாளராக தோழர் S.ரவீந்திரன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதே போல ஜூன் 8ஆம் தேதி நீலகிரி மாவட்ட மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. அதில் தோழர் R.ஜேகப் மோரீஸ் அவர்கள் மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இரண்டு மாவட்ட சங்கங்களுக்கும் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

11. அகர்தலா மத்திய செயற்குழு, கோவை மாவட்ட செயற்குழு மற்றும் சென்னை மாநில நிர்வாகிகள் கூட்டம் ஆகியவற்றின் முடிவுகளை அனைத்து மாவட்ட சங்கங்களுக்கும் தெரிவிக்கும் வகையில் அனைத்து மாவட்ட மாநாடுகளையும், ஜூன் மாதம் 27க்குள் நடத்திட வேண்டும் என்றும் அதற்கான மாவட்டங்களுக்கு மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாநில நிர்வாகிகளை பயன்படுத்திட வேண்டும் என்றும் அந்தக் கூட்டங்களில் கிளை பொதுக்குழுக்களுக்கான தேதிகளை நிர்ணயித்து அனைத்து கிளைகளுக்கும் இந்த தகவல்களை கொண்டு செல்ல வேண்டும் என்றும் மாநில நிர்வாகிகள் கூட்டம் முடிவு செய்துள்ளது.

12. நமது மாநில சங்கத்தின் இணைய தளத்தை மென்மேலும் செழுமை படுத்தும் விதமாக மத்திய சங்கத்தின் செய்திகளை அன்றாடம் தமிழாக்கம் பணியினை தோழர்கள் P.இந்திரா ACS மற்றும் கோவை மாவட்ட செயலாளர் தோழர் C.ராஜேந்திரன் ஆகியோர் செய்து மாநில சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அன்றாட முக்கியமான செய்திகளை தோழர் S.செல்லப்பா AGS அவர்கள் மாநில அமைப்பு செயலாளர் தோழர் N.சக்திவேல் அவர்களின் உதவியோடு வழங்க வேண்டும் என்றும் அவற்றை இணைய தளத்தில் பதிவேற்றும் பணியினை மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் அவர்களும், தோழர் K.V.சிவகுமரன் CVP அவர்களும் செய்திட வேண்டும் என்றும் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

13. தொலை தொடர்பு தோழன் ஆசிரியர் குழுவில் உள்ள தோழர்கள் S.செல்லப்பா, A.பாபு ராதாகிருஷ்ணன், M. முருகையா மற்றும் தோழர் P.இந்திரா ஆகியோர் பிரதி மாதம் 20 மற்றும் 21 ஆம் தேதிகளில் கூடி பத்திரிக்கைக்கான செய்திகளை விவாதித்து முடிவெடுத்து தயார் படுத்திட வேண்டும்.

14. சென்னை கூட்டுறவு சொசைட்டியில் அன்றாட கடன்களுக்கு கூட வங்கியில் வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கான ஊழியர்களின் பணத்திற்கான டிவிடெண்ட் வழங்கப்படவில்லை. நிலத்தை நிலமாக பிரிக்க மூன்றாண்டுகளுக்கு முன்பே தயாராக இருந்த நிலையில் தேவையற்ற காரணங்களை கூறி இன்று அந்த நிலத்தை சிலர் கபளீகரம் செய்ய நடைபெற்று வரும் முயற்சி ஆகியவற்றை கண்டித்து தொடர் இயக்கங்களை நடத்துவது என்றும் இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் முடிவு செய்துள்ளது.

15. ஜூலை மாதம் 15க்குள் புதிய உறுப்பினர் சேர்க்கும் இயக்கத்தை திட்டமிட்டு நடத்திட வேண்டும் என்று இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் மாவட்ட கிளை சங்கங்களை கேட்டுக் கொள்கிறது.

16. மாநில கவுன்சிலுக்கான ஆய்படு பொருட்களை மாநில சங்கத்திற்கு 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கும்படி கிளை மற்றும் மாவட்ட சங்கங்களை இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

17. ஜூலை மாத இறுதியில் நமது பொது செயலாளரின் தேதியினை பெற்று நமது மாநில செயற்குழுவை இரண்டு நாள் கூட்டமாக நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மாநில செயற்குழுவை மதுரை மாவட்டம் பழனியில் நடத்துகிறோம் என ஏற்றுக் கொண்டுள்ள பழனி தோழர்களை தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் மனதார பாராட்டுகிறது.

BSNL ஊழியர் சங்கத்தின் இந்த தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக CGM அலுவலகம் மாவட்ட சங்க பொருப்பாளர்கள் தோழர் ந.ராமலிங்கம், தோழர் சரவணன், தோழர் Y.பாபு மற்றும் தோழர் S.குணசேகரன் உள்ளிட்ட தோழர்கள் செய்திருந்தமைக்கு இந்த மாநில நிர்வாகிகள் கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது.

தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டத்தின் முடிவுகளை தமிழகம் முழுவதும் நாம் முழுமையாக அமல் படுத்துவோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபுராதாகிருஷ்ணன்)**
**மாநிலச்செயலாளர்**


BSNL EMPLOYEES UNION
TAMILNADU CIRCLE
TREASURER



